15 DEC 2023
600 035

## சுருக்கம்

பணியமைப்பு – தமிழ்நாடு அமைச்சுப் பணி – கருணை அடிப்படை பணி நியமனம் – திரு.சு.ஜெயக்குமார், த/பெ (லேட்) திரு.வெ.சுப்பிரமணி, இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் – பணிவரன்முறை செய்து – ஆணைகள் – வெளியிடப்படுகிறது.

---

கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (காப-7) துறை

திருவள்ளுவர் ஆண்டு 2054, சோபகிருது கார்த்திகை மாதம் 22-ம் நாள்

அரசாணை (டி) எண்.707 நாள் 08.12.2023

படிக்கப்பட்டது

1. அரசாணை (நிலை) எண். 98, கால்நடை பராமரிப்பு, பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத் (கா.ப.7) துறை, நாள் 11.10.2021.
2. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கடித ந.க.எண். 60136/ஆர்3/2014, நாள் 04.06.2023.

------

**ஆணை:**

மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கடிதத்தில், காஞ்சிபுரம் மண்டலம், அய்யம்பேட்டை கால்நடை மருந்தகத்தில் கால்நடை பராமரிப்பு உதவியாளராக பணியிலிருக்கும்போது 28.04.1998 அன்று மறைந்த திரு.வெ.சுப்பிரமணி என்பவரது வாரிசுதாரரான திரு.சு.ஜெயக்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் அலுவலகத்தில் இளநிலை உதவியாளராக பணி நியமனம் வழங்கப்பட்டு, தனியர் 08.06.2022 முற்பகல் முதல் பணிபுரிந்து வருகிறார் என்றும் தனியரின் அனைத்து ஆவணங்கள் / சான்றுகள் சரிபார்க்கப்பட்டது என்றும் எனவே தனியரது பணியினை அவர் இளநிலை உதவியாளர் பதவியில் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016, பிரிவு 20(6)(b)யினை தளர்வு செய்தும் அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ.1) துறை, நாள் 23.01.2020க்கு விலக்களித்தும் தனியர் பணியில் சேர்ந்த நாளான 08.06.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்து ஆணை வழங்குமாறும் அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையின்படி திரு.சு.ஜெயக்குமார் என்பவர் அவரது தந்தை மறைந்த மூன்று ஆண்டுகள் கடந்த பின்னர் கருணை அடிப்படையில் பணி வேண்டி விண்ணப்பித்திருந்த நிலையிலும் விண்ணப்பம் பெறப்பட்ட நாளில் தனியர் 18 வயது பூர்த்தி செய்யவில்லை என்பதாலும், இந்நிகழ்வினை சிறப்பு நிகழ்வாக கருதி தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணி நிபந்தனைகள்) சட்டம், 2016 பிரிவு 20 (6) (b)னை தளர்வு செய்தும் மற்றும் அரசாணை (நிலை) எண்.18, தொழிலாளர் மற்றும் வேலை வாய்ப்பு (க்யூ.1) துறை, நாள் 23.01.2020க்கு விலக்களித்தும் திரு.சு.ஜெயக்குமார் என்பவருக்கு கருணை அடிப்படையில் இளநிலை உதவியாளர் பதவியில் பணி நியமனம் வழங்குவதற்கு கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநருக்கு அனுமதி அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் பணிவரன்முறை செய்யப்படும் பொழுது முன்தேதியிட்டு பணப்பயன் வழங்க வேண்டிய தேவை எழவில்லை என்பதால் தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் (பணிநிபந்தனைகள்) சட்டம் 2016-இல் பிரிவு 28(2)ஐ தளர்வு செய்யும் அவசியம் எழவில்லை.

3. கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநரின் கருத்துருவை அரசு நன்கு ஆய்வு செய்து, அதனை ஏற்று கருணை அடிப்படையில் பணிநியமனம் செய்யப்பட்ட திரு. சு.ஜெயக்குமார் என்பவரின் பணியினை அவர் பணியில் சேர்ந்த நாளான 08.06.2022 முற்பகல் முதல் பணிவரன்முறை செய்யலாம் என முடிவு செய்து, அவ்வாறே அரசு ஆணையிடுகிறது.

4. இப்பணிவரன்முறை தொடர்பாக தனியரின் பணிப்பதிவேட்டில் உரிய பதிவுகள் செய்யவும் இவ்வரசாணையுடன் திருப்பியனுப்பப்படும் தனியரின் அசல் ஆவணங்களைப் பெற்றுக் கொண்டமைக்கான ஒப்புகையை அரசுக்கு அனுப்பி வைக்குமாறும் கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள் இயக்குநர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

5. இவ்வரசாணைக்கு மனிதவள மேலாண்மைத் துறையின் கடித எண்.3284/ஏ2/2023-1, நாள் 07.09.2023-ன்படி அத்துறையின் இசைவு பெறத் தேவையில்லை.

(ஆளுநரின் ஆணைப்படி)

மங்கத் ராம் சர்மா
அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்

பெறுநர்
இயக்குநர், கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள்,
சென்னை-35.
திரு. சு. ஜெயக்குமார், இளநிலை உதவியாளர். (இயக்குநர்,
கால்நடை பராமரிப்பு மற்றும் மருத்துவப் பணிகள், சென்னை-35 மூலமாக)
மாநில கணக்காயர், சென்னை-18/18 (பெயரில்)
சம்பந்தப்பட்ட மாவட்ட கருவூல அலுவலர்.

<u>நகல்</u>
கூடுதல் தலைமைச் செயலாளரின் தனிச் செயலாளர், கால்நடை பராமரிப்பு,
பால்வளம், மீன்வளம் மற்றும் மீனவர் நலத்துறை, சென்னை-9.
இருப்புக் கோப்பு /உபரிப்படிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

(ஜெ. பிரமிளா)
அரசு சார்புச் செயலாளர்
8.12.23